10/=

பக்கங்கள் 04

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 04 வியாழக்கிழமை மே 04 2017 ethirolijaffna@gmail.com 021 300 48 48

## நாளை பஸ் ஓடும்



தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக நாளை மருத்துவர்களுடன் இணைந்து தொழிற்சங்கங்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் போக்குவரத்து சேவைகள் வழமைபோல இடம்பெறும்.

# மட்டுவில் இளைஞன் தூக்கிட்டுச் சாவு!



இருதயநோய் தாங்க முடியாமல் இளைஞர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் இன்று காலை மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சிவசுப்பிரமணியம் கஜதீபன் (வயது – 31) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தார்.

மேற்படி இளைஞர் இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். இன்று காலை வீட்டில் இருந்தவர்கள் வெளியில் சென்றிருந்த போது அவர் சாமி அறைக்குள் சென்று மின்விசிறியில் தூக்குமாட்டி தற்கொலை செய்துகொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இன்று நண்பகல் சடலம் மரண விசாரணைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## வடக்கு உறுப்பினர்களுக்கு வரியற்ற வாகனச் சலுகை

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிற்கு வரியற்ற வாகன இறக்கு மதிக்கான சலுகை கிடைத்துள்ளதாக அறியமுடிகின்றது. இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர்களே வரியற்ற வாகன இறக்குமதிக்கான சலுகையை அனுபவித்து வந்திருந்த நிலையினில் மாகாண சபை உறுப்பினர்களுக்கு இச் சலுகை கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

## நவீன வசதிகளுடன் காங்கேசன்துறை துறைமுகம்



காங்கேசன்துறை துறைமுகத்தை நவீன வசதிகளுடன் மறுசீரமைப்பதற்கு இந்தியாவின் இறக்குமதி ஏற்று மதி வங்கி (எக்சிம் வங்கி) நிதி வழங்கவுள்ளது. இதன்படி 45.27 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை இலங்கைக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் குறித்த நிபந்தனைகள் தொடர்பில் இந்திய இறக்குமதி ஏற்றுமதி வங்கியுடன் கலந்துரையாடி ஒப்புதல்களை பெற்று ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவது தொடர்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## மாலையில் மழை பெய்யும்



நாட்டின் பெரும்பாலான மாகாணங்களில் இன்று பிற்பகல் 2 மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கு அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகுமென திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் பொது மக்களை அவதானமான இருக்குமாறு திணைக்களம் அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## பெற்றோலுக்கு மீண்டும் தட்டுப்பாடா?



அரசு அளித்த வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றுவதற்கான எந்தவொரு அறிகுறியும் தென்படாததால் தங்கள் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கத் தீர்மானித்திருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஸ்ரீலங்கா சுதந்திர சேவையாளர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஐயந்த பரெய்கம தெரிவித்துள்ளார். இதனால் நாடெங்கும் மீண்டும் பெற்றோலுக்கான தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

## வடக்கு பாடசாலைகளுக்கு குடிநீர் வடிகட்டும் இயந்திரம்

வடமாகாணத்தில் உள்ள 18 பாடசாலைகளுக்கான குடிநீர் வடிகட்டும் இயந்திரங்களுக்காக 17 லட்சம் ரூபா நிதி வடக்குமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாசடைந்த நீரால் ஏற்படும் நோய்களில் இருந்து மாணவர்களைக் காப்பதற்காகவே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கறுப்பு கொடி போராட்டம்

வடக்கு கிழக்கிற்கு வரும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கி கறுப்பு கொடி போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என வட மாகாண சபை உறுப் பினர் எம்.கே. சிவாஜி லிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வலி. வடக்கு விடுவிக்கப்படும் என ஜனாதிபதி வாக் குறுதி அளித்திருந்த நிலையில், அந்த வாக்குறுதி வழங் கப்பட்டு எதிர்வரும் ஜூன் மாதத்துடன் ஓராண்டு பூர்த்தி யாகின்றது. இவ்வாறாக தீர்வின்றி தொடர்ந்துவரும் தமிழர் பிரச்சினைகளுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்குள் தீர்வு காணப்படாவிடின், தமிழ் மக்கள் அனைவரும் வீதிக்கு இறங்குவர் என்றார்.

எதிரொலி
Ethiroli
விரைவில் அதிக பக்கங்களுடன் உங்கள் கைகளில்..

## ஆணாக மாறிய பெண்

பர்தா அணிந்த நிலையில் கண்டி குட்ஷெட் பஸ் நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றவரை, கண்டி பொலிஸ் பெண்கள் பிரிவினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

கைது செய்தவரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று சோதனையிட்ட போது பர்தாவில் முகத்தை மறைத்திருந்தவர் ஆண் என தெரியவந்துள்ளது.தன் மனைவியின் மீது சந்தேகம் ஏற்பட்டதால் அவரை ரகசியமாகக் கண்காணித்து, கையும் மெய்யுமாகப் பிடிக்கவே இப்படி 'பெண்ணாக' வேடமிட்டதாக அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

## மகிந்தவின் கூட்டச்செலவு

# 5 கோடி!



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க் கட்சியின் காலிமுகத் திடலில் நடைபெற்ற மே தின கூட்டத்துக்காக சுமார் ஐந்தரை கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. மேடை அமைத்தலுக்கு மாத்திரம் 87 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதைவிட கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கான மது பானம், உணவு என்பவற்றுக்காக நான்கு கோடி ரூபா செலவிடப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் 10 கோடி ரூபா வரையில் இந் தக் கூட்டத்துக்கு செலவிட்டே மக்களை மகிந்த ஆதரவு அணியினர் அழைத்து வந்ததாகவும் கூறப்படுகின்றது.

## நகைமோசடி தொடர்பில் முறைப்பாடு இல்லை



திருட்டு நகை மோசடி தொடர்பில் இதுவரையில் தன்னிடம் எதுவித முறைப் பாடும் கிடைக்கப்பெற வில்லை எனத் தெரிவித்த வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண பாதிக்கப் பட்டவர்கள் இருப்பின் தன்னிடம் முறைப்பாடு செய்யுமாறும் தெரிவித்துள்ளார். இதேவேளை, திருட்டு நகைகளுக்கு இலஞ்சம் கேட்டதாக குற்றஞ் சாட்டப் பட்டுள்ளதாகக் கூறப்படும் யாழ்ப்பாணம் உப பொலிஸ் பரிசோத கரை வருடாந்த இடமாற்றத்துக்காக வல் வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்துள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அலறுகிறது 'ஜெ' ஆவி அச்சத்தில் மன்னார்குடி



ஜெயலலிதாவின் போயஸ் கார்டனில் நள்ளிரவு கேட்கும் அலறல்களால் அங்குள்ளவர்கள் பெரும் அச்சத்தில் உறைந்துள்ளனர் என அங்குள்ள மன்னார்குடி குடும்ப உறவினர்கள் கூறியுள்ளனர்.

ஜெயலலிதாவின் கொடநாடு எஸ்டேட்டில் நடந்த கொள்ளை முயற்சியும் அடுத்தடுத்து நடக்கும் உயிர்ப்பலிகளும் ஆளும்கட்சியினர் மத்தியில் அதிர்வலைகளை உருவாக்கியிருப்பது ஒரு புறமிருக்க, 'ஜெயலலிதா தொடர்பான விடயங்களில் தலையிடுகின்றவர்கள் அனைவரும் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றமையும் வெட்ட வெளிச்சம்.



ஜெயலலிதா இறந்து 150 நாட்கள் ஆகிவிட்ட நிலையில் அவரது மரணம் தொடர்பான மர்மம் இன்னும் விலகாத நிலையில், அ.தி.மு.கவின் பிளவு, சசிகலாவுக்கு சிறை. லஞ்சப் புகாரில் தினகரனுக்கு சிறை, கொடநாடு எஸ்டேட் கொலை மர்மம் என தினம்தினம் திகில் காட்சிகள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

இதனால் தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்றே தெரியாமல் நாட்களைக் கடத்தி வருகின்றனர் போயஸ் கார்டன் ஊழியர்கள்.

கார்டனைப் பொறுத்தவரையில், 'ஆண்களுக்கு ராசியில்லாத வீடு' என்று சொல்வார்கள். ஜெயலலிதா பயன்படுத்திய அறையில் யார் வந்து தங்கினாலும், அந்த இரவு அவர்கள் நிம்மதியாக இருந்ததில்லை. கடந்த சில நாட்களாக ஏதேதோ சத்தம் கேட்கிறது. அதுவும் அலறல் தொனியில் இருக்கிறது!" எனக் குழப்பத்தோடு கூறுகிறார்கள் கார்டன் ஊழியர்கள்.

## முடிவுக்கு வரும் ஜெயலலிதா மரண சர்ச்சை?

"தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற போது எடுக்கப்பட்ட புகைப்படம் உரிய அனுமதி பெற்று விரைவில் வெளியிடப் படும். அப்போது ஜெயலலிதாவின் மரணம் குறித்த சர்ச்சைக்கு முடிவு கிட்டும்" என அ.தி.மு.க. அம்மா கட்சியின் கர்நாடக மாநிலச் செயலர் வா.புகழேந்தி தெரிவித்துள்ளார்.

டி.டி.வி.தினகரன் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மதுரை பழங்காநத்தம் பஸ் நிலையம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

## மே.இ.தீவுகள் திண்டாட்டம்



90 ஓட்டங்களை விளாசிய ஹோப்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியின் வெற்றி வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இந்த டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 312 ஓட்டங்களையும், பாகிஸ்தான் அணி 393 ஓட்டங்களையும் பெற்றன.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, மூன்றாம் நாள் ஆட்ட நேரம் முடியும்போது ஒரு விக்கெட் இழப்புக்கு 40 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

மீண்டும் நேற்று தனது ஆட்டத்தைத் தொடர்ந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி, நான்காம் நாள் ஆட்ட நேரம் முடிவின்போது 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 264 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

அந்த அணி சார்பாக ஆகக்கூடுதலாக ஹோப் 90 ஓட்டங்களை விளாசி-னார். பாகிஸ்தானின் பந்துவீச்சில் யாசிர் ஷாஹ் 6 விக்கெட்டுகளைச் சாய்த்தார். நான்காம் நாள் ஆட்ட நிலைவரப்படி மேற்கிந்தியத் தீவுகள் அணி, 183 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது.

இன்னும் ஒரு விக்கெட் மாத்திரமே அந்த அணியிடம் இருப்பதால் அந்த அணியால் எதிரணிக்கான வெற்றியிலக்காக 200 ஓட்டங்களுக்குக் கூடுதலாக நிர்ணயிக்கக் கூடிய சாத்தியம் இல்லை.

எனவே பாகிஸ்தான் அணி சற்று வேகமாக ஆடினால் அந்த இலக்கை இலகுவாக எட்டிவிடமுடியும்.

ஐந்தாம் நாள் ஆட்டம் இலங்கை நேரப்படி இன்று இரவு 7.30 மணியளவில் ஆரம்பிக்கும்.

### ஐ.பி.எல். நேற்றுவரையான புள்ளி விவரம்

| அணி | போ | வெ | தோ | ச | மு.அ | பு |
|---|---|---|---|---|---|---|
| மும்பை | 10 | 8 | 2 | 0 | 0 | 16 |
| கொல்கத்தா | 11 | 7 | 4 | 0 | 0 | 14 |
| புனே | 11 | 7 | 4 | 0 | 0 | 14 |
| ஹைதராபாத் | 11 | 6 | 4 | 0 | 1 | 13 |
| பஞ்சாப் | 9 | 4 | 5 | 0 | 0 | 8 |
| டில்லி | 9 | 3 | 6 | 0 | 0 | 6 |
| குஜராத் | 10 | 3 | 7 | 0 | 0 | 6 |
| பெங்களூர் | 11 | 2 | 8 | 0 | 1 | 5 |

குறிப்பு: போ : போட்டி, வெ : வெற்றி, தோ : தோல்வி, ச : சமன், மு.அ. : முடிவற்றது, பு : புள்ளி

### ஐ.பி.எல். நேற்றைய ஆட்ட முடிவு

புனே 4 விக்கெட்டுகளால் வெற்றி

கொல்கத்தா: 155/8 (20) - புனே: 158/6 (19.2)

## சுரங்கத்தில் சிக்கி 35 பேர் பலி



ஈரானில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் நேற்று நிகழ்ந்த வெடி விபத்தில் 35 தொழிலாளர்கள் பரிதாபமாக பலியாகினர். மேலும், 50இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சுரங்கத்தினுள் சிக்கியுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், மீடகப்பட்ட பல தொழிலாளர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். சுரங்கத்தினுள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 2 கிலோ மீற்றர் நீளமுடைய இந்த சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்பதில் சிரமம் இருப்பதால், பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.


## ஓ.பி.எஸ்ஸுடன் உறவு தொடரும்



உள்ளூராட்சித் தேர்தலில் ஓ.பன்னீர்செல்வம் அணியினருடனான கூட்டணி தொடரும் என்று த.மா.கா. மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலையொட்டி த.மா.கா. மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சென்னை தியாகராய நகரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

## "பூமியை விட்டு வெளியேறுங்கள்"



அடுத்த நூற்றாண்டுக்குள் மனிதர்கள் வேறொரு கிரகத்தை கண்டறிந்து அங்கே குடியேற வேண்டியிருக்கும் என சொல்லி அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறார் பிரபல அறிவியலாளர் ஸ்டீபன் ஹொக்கிங்.

பி.பி.சி. தொலைக் காட்சிக்காக ஸ்டீபன் ஹொக்கிங் படமாக்கிய ஆவணத் தொடர் ஒன்றிலேயே அவர் இதனைஅழுத்தமாக சொல்லியிருக்கிறார்.

ஏற்கெனவே ஒரு முறை ஸ்டீபன் 1000 ஆண்டுகளில் பூமி மனிதர்களால் அழியும் என்றார். ஆனால், இப்போது, "அதற்கு 100 ஆண்டுகளே போதும். அதற்குள் வேறு கிரகம் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். ஆபத்து எந்த நேரமும் பூமியை தாக்கலாம்" என வருத்ததுடன் குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்கு பல காரணங்களை அவர் கூறியிக்கிறார். அதில் முக்கியமான மூன்று விடயங்கள், புவி வெப்பமயமாதல், அணு ஆயுத போர் மற்றும் ஆஸ்ட்ராய்ட் எனப்படும் சிறு கோள்களின் மோதல் என்பனவாகும்.

## ஆர்யாவுக்கு வந்த சோதனை



ஆர்யா தமிழ் சினிமாவின் முன்னணி ஹீரோவாக வளர்ந்து வந்தவர். எனினும் அண்மைக்காலமாக அவரின் திரைப் பயணத்தில் வெற்றி என்பதே இல்லாமல் போய்விட்டது.

கடம்பன் படத்தை ஆர்.பி. சௌத்ரியுடன் இணைந்து தயாரித்த ஆர்யாவுக்கு, அந்தப் படத்தின் தோல்வி, அவர் அடுத்து தயாரிக்கவிருந்த சந்தனத்தேவனையும் கடும் பணநெருக்கடியில் சிக்க வைத்துள்ளதாம்.

## கோவில் பெட்டிக்குள் உலகப்பந்து



தமிழ்நாட்டின் திருப்பூரில் உள்ள சிவன்மலையில் சுப்ரமணியசாமி கோவிலில் ஆண்டவன் உத்தரவு பெட்டியில் பக்தர்களின் கனவில் சிவன்மலை கடவுள் வந்து ஒரு பொருளை வைக்க உத்தரவிடுவாராம்.

அதுபோலலே கடந்த பெப்ரவரி மாதம் இந்தப் பெட்டியில் சங்கிலி வைக்கப்பட்டது எனவும் அதன் பின்னர் தான் சசிகலாவின் சிறை தண்டனை உறுதியா-னது எனவும் நம்பப்படுகிறது..

இந்நிலையில், சென்னையைச் சேர்ந்த நீலகண்ட மகரிஷி என்பவர், உலக உருண்டையை உத்தரவு பெட்டியில் வைத்துள்ளார்.

வடகொரியா, அமெரிக்கா இடையே போர் பதற்றம் நிலவும் சூழலில் உலக உருண்டை வைக்கப்பட்டுள்ளதால் அதன் மூலம் உலகுக்கு நன்மை நடக்கவும் வாய்ப்புள்ளது எனக் கூறுகிறார்கள்.

## மீனுக்கு நிரந்தர விலை

நிரந்தரமான விலையில் மீனை விற்பனை செய்யக் கூடிய நடை முறை வேலைத்திட்டம் வகுக்கப்படும் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வள இராஜாங்க அமைச்சர் திலிப் வெதஆரச்சி தெரிவித்துள்ளார்.
நாட்டில் சில பிரதேசங்களில் தற்போது மீனின் விலை அதிகரித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் கூறினார். இது தொடர்பாக கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுடன் இராஜாங்க அமைச்சர் நேற்று பேச்சு நடத்தினார். பிடிக்கப்படும் மீன்களின் தரத்தை பாதுகாத்து விற்பனை செய்யக் கூடிய முறை குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

## மகிந்தவின் பாதுகாப்பு குறைப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜக்சவின் பாதுகாப்பு பிரிவு உறுப்பினர்கள் குறைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.
மகிந்தவின் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸ் பிரிவிலிருந்து 50 பேர் நீக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

## பிக்குவை மிரட்டியவர் கைது




முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் எலன் மெதினியாராமய விகாரையின் விகாராதிபதியுமான உடுவே தம்மாலோக தேரரை, நீதிமன்ற வளாகத்துக் குள் வைத்து அச்சுறுத்தி னார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நபரை, வாழைத் தோட்டம் பொலிஸார், நேற்று கைதுசெய்தனர்.
ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி, தொல்லைப் படுத்துவதாக தேரருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய் யப்பட்ட வழக்குக்கு சமுக மளித்திருந்த போது, குறித்த சந்தேக நபர், நீதிமன்ற வளாகத் துக்குள் வைத்து தேரரை அச்சுறுத்தியதாகக் கூறியே கைது செய்யப் பட்டுள்ளார்.

## தங்கம் தோண்டிய பொலிஸார் தகரக் குவளையை மீட்டனர்

புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம் பகுதியில் 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது விடுதலைப் புலிகள் ஒரு தொகை தங்கத்தை நிலத்தில் புதைத்து வைத்துள்ளதாக கிடைத்த தகவலின் அடிப் படையில் பொலிஸார் நேற்று புதன்கிழமை பிற்பகல் அவ்விடத்தில் அகழ்வுப் பணியை ஆரம்பித்திருந்தனர்.
இந்நிலையில் அங்கே தங்கம் எதுவும் மீட்கப்படாத நிலையில் பொலிஸார் உக்கிப்போன தகர தேநீர் குவளை ஒன்றை மட்டும் மீட்டுள்ளனர். இதனை யடுத்து சினம் டைந்த பொலிஸார் அகழ்ந்த கிடங்குகளை நேற்று இரவு மூடிவிட்டு அங்கிருந்து வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ்ப்பாணம் படும்பாடு..




## இலங்கை யுவதிக்கு அமெரிக்காவில் கௌரவம்



இலங்கையை சேர்ந்த இளம் பெண் ஒருவர் இன்றைய தினம் வொஷிங்டனில் நடைபெறும் விழா ஒன்றில் உலகளாவிய எழுச்சி இளம் தலைவராக அங்கீகரிக்கப்படவுள்ளார். இலங்கை இளைஞர் தலைவரான சமத்யா பெர்னான்டோ என்ற யுவதியே இந்த விருதிற்கு அங்கீகரிக்கப்படவுள்ளார்.
மோதலை தீர்ப்பதில் தைரியம், பாதுகாப்பு ஊக்குவித்தல் மற்றும் சவாலான சூழல்களில் பொருளாதார வாய்ப்பை உருவாக்குதல் ஆகியவற்றினை அடிப்படையாக கொண்டு இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
சமத்யா உட்பட 10 பேருக்கு வளர்ந்து வரும் இளம் தலைவர்கள் விருதுகள் வழங்கப்படுகின்றன.

## இராமர் பாலம் அமைக்கோம்

"இலங்கைக்கும் இந்தியாவும் இடையில் பாலமொன்றை அமைப்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை. பாலமொன்றை அமைக்கும் எதிர்பார்ப்பு இந்தியாவிடம் இருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவது குறித்து, அதன் தேவைப்பாட்டுக்கு அமைய, எதிர்காலத்தில் முடிவெடுக்கப்படும்" என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
இந்தியாவுக்குச் சென்ற பிரதமர் பாலம் அமைப்பது தொடர்பில் இந்தியாவுடன் ஒப்பந்தம் ஏதும் செய்துகொண்டாரா என நாடாளுமன்றில் கேள்வி எழுப்பிய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் திகில்

## ஒரே ஊரில் 4 பேர் பலி!

வவுனியா, செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தட்டான்குளம் கிராமத்தில் சிறுநீரக நோய் தாக்கம் காரணமாக கடந்த 45 நாட்களுக்குள் நான்கு பேர் மரணமடைந்துள்ள நிலையில் அப்பகுதி மக்கள் தமது கிராமத்தை விட்டு வெளியேறுவதா என கேள்வி எழுப்பியுள்ளனர்.
இக்கிராமத்தில் உள்ள குடிநீர் காரணமாகவே இச்சிறுநீரக நோய் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட் டுவருகிறது.
இது தொடர்பில் இப்பகுதி மக்கள் அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் எனப் பலரிடமும்ம் முறையிட்டும் எந்தத் தீர்வும் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால், தமது பிள்ளைகளையாவது காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அக்கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து செல்லலாம் என தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## 4 மாதத்தில் 2680 பேருக்கு டெங்கு



மட்டக்களப்பு மாவட்டத்தில் 2017 ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையிலான 4 மாத காலப்பகுதியில் 2680 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் 5 பேர் உயிரிழந்துள்ளதாக மாவட்ட தொற்றுநோய் தடுப்பு நிபுணர் டொக்டர் கே.தர்சினி தெரிவித்தார்.

## தாயையும் மகளையும் வெட்டி நகைகள் கொள்ளை

ஏறாவூர் நகர காட்டுப்பள்ளி வீதியை அண்டி அமைந்துள்ள வீடொன்றில் இன்று அதிகாலை 2.30 மணியளவில் வீட்டுக்கூரை ஓடுகளைக் கழற்றிக் கொண்டு நுழைந்த கொள்ளையர்கள் வீட்டிலிருந்த தாயையும் மகளையும் கத்தியால் வெட்டிவிட்டு பணப் பையிலிருந்த 40 ஆயிரம் ரூபாய் பணத்தையும் இரண்டு தங்கச் சங்கிலிகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

## மகிந்தவே தலைவர்? ஜூன் 1 இல் தீர்ப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மீண்டும் நியமிக்குமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், பிரதிவாதிகள் தரப்பினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை எதிர்ப்பு தொடர்பான உத்தரவு, ஜூன் 1ஆம் திகதி பிறப்பிக்கப்படும் என, கொழும்பு மாவட்ட நீதிமன்றம், நேற்று உத்தரவிட்டது.
2015ஆம் ஆண்டு ஜனவரியில் முறையாக மத்திய குழுவைக் கூட்டாமல் புதிய தலைவர் தெரவு செய்யப்பட்டதாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கு எதிராக இந்த வழக்கைக் கொண்டு செல்ல முடியாது என்று, அநுரபிரியதர்ஷன யாப்பாவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணியினால் அடிப்படை எதிர்ப்பு சமர்ப்பிக்கப்பட்டிருந்து.

## ஆஸ்திரேலியாவுக்கு நேரடி விமானம்

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரிலிருந்து கொழும்புக்கு நேரடியான விமான சேவை ஆரம்பிக்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
ஸ்ரீலங்கன் விமான சேவை தனது புதிய நேரடி சேவையை, இந்தாண்டுக்குள் ஆரம் பிக்கவுள்ளதாக ஆஸ் திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## படகுகள் விடுவிப்பு மோடிக்குப் பயந்தல்ல



'இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த படகுகளில் பல சேதமடையும் நிலையில் உள்ளதால் அதனை விடுவிக்க தீர்மானித்தோம்' என மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று (03) இடம்பெற்ற வாய்மூல வினாக்களுக்கான விடையளிக்கும் நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜயரத்ன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போது அவர் இதனைக் கூறினார்.

## வெளிநாடு சென்ற பெண்கள் மாயம்!

பணியாளர்களாக வெளிநாடுகளுக்குச் சென்ற ஐந்து இலங்கை பெண்கள் காணாமல் போயுள்ளதாக அவர்களது உறவினர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.சவுதி அரேபியா மற்றும் லெபான் ஆகிய நாடுகளுக்கு பணியாளராக சென்ற ஐவரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.
காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகச் செயலாளர் நளின் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

## நாளை நாளும் கோளும்

05.05.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் சித்திரை மாதம் 22ஆம் நாள்.
தசமி மு.இ. 11.22 வரை
மகம் மு.ப. 08.55வரை
மரணயோகம்
இராகுகாலம் 10.26-11.56
சுபநேரம் 05.56-07.26
எமகண்டம் 02.56-04.26

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| லாபம் | மகிழ்ச்சி | களிப்பு | சோர்வு | மறதி | தனம் | ஓய்வு | நிம்மதி | பாராட்டு | அலைச்சல் | ஆர்வம் | யோகம் |

## மைத்திரி-மகிந்த இணைவு
# இரகசியப் பேச்சுவார்த்தை



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இருவரையும் இணைக்கும் விசேட பேச்சு ஒன்று நடத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இது தொடர்பில் நல்லாட்சி அரசாங்கத்தின் பிரபல அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் சிலர் நேற்று இரவு சினமன் கிராண்ட் "சியரஸ் பப்" இல் சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளதாக அறியமுடிகின்றது.

கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற மே தின பேரணியை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடல் நள்ளிரவு முதல் விடியும் வரையில் நீண்ட நேரம் நடைபெற்றதாக தெரியவருகிறது. இதில் மகிந்த அமரவீர, சந்திம வீரகொடி, லசந்த அழகியவன்ன மற்றும் டிலான் பெரேரா ஆகியோர் பங்கேற்றுள்ளதாக அறியமுடிகின்றது.

## பிரிட்டன் பாராளுமன்றம் இன்று கலைப்பு

ஜுன் 8 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல்கள் இடம்பெறவுள்ளதால் இன்று பிரிட்டன் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

இந்தக் கலைப்புக்கான உத்தியோகபூர்வ அனுமதியை பிரிட்டன் மகாராணி வழங்கியுள்ளார். அத்துடன் புதிய அரசு அமையும் வரை பிரதமர் தெரேச மே தலைமையிலான தற்காலிக அரசு செயற்படுவதற்கும் மகாராணி அனுமதியளித்துள்ளார்.



# அந்த நாள் ஞாபகம்.....!



1991.05.04

"எஸ்.ஐ.என்.எஸ்" அபிதா என்ற கப்பல் கடற்கரும்புலிகளான சிதம்பரம், ஜெயந்தன், ஆகியோரால் பருத்தித்துறைக் கடலில் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது. இது இலங்கை கடற்படைக்கு மட்டுமல்லாது அரசிற்கும் பெரும் நெருக்கடியைக் கொடுத்தது. இது அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரத்தினவிற்கு விழுந்த அடியாக அன்றைய நாளில் பார்க்கப்பட்டது.

## இன்றைய மக்கள் போராட்டங்கள்




## மகிந்தவின் பாதுகாப்பு
# திடீர் குறைப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜக்சவின் பாதுகாப்பு பிரிவு உறுப்பினர்கள் குறைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. மஹிந்தவின் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸ் பிரிவிலிருந்து 50 பேர் நீக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. ஓய்வு பெற்ற ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவுக்கு நூறு பேர் கொண்ட இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் இராணுவத்தினர் நீக்கப்பட்டு அதற்காக பொலிஸ் அதிகாரிகளை பாதுகாப்பிற்கு நியமித்தமை குறிப்பிடத்தக்கது.

## காலிறுதியில் சோமஸ்கந்தா, வொலிகிங்ஸ்

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் நடத்திவரும் கரப்பந்தாட்டச் சுற்றுத்தொடரில் நேற்று இரவு நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற புத்தூர் சோமஸ்கந்தா மற்றும் கச்சாய் வொலிகிங்ஸ் கழகங்கள் காலிறுதிச் சுற்றுக்குத் தகுதிபெற்றன.

புத்தூர் சென்றல் ஸ்ரார் கழகத்தை எதிர்கொண்ட புத்தூர் சோமஸ்கந்தா, 2-1 என்ற சுற்றுக் கணக்கிலும், வழக்கம்பரை அம்பாளை எதிர்கொண்ட கச்சாய் வொலிகிங்ஸ் கழகம் 2-1 என்ற சுற்றுக் கணக்கிலும் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறின.

## கோவில் உடைத்து நகைகள் திருட்டு

திருக்கோவில் விநாயகபுரம் கிராமத்திலுள்ள காளி கோவிலில் சுமார் 10 பவுண் தங்கநகைகள் திருட்டுப் போயுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கோவிலின் கருவறைக் கதவு திங்கட்கிழமை (03) இரவு உடைக்கப்பட்டு, அம்மனுக்கு அணியப்பட்டிருந்த தங்கநகைகள் திருடப்பட்டுள்ளன. அட்டியல், தோடு, தங்கச் சங்கிலி உள்ளிட்ட நகைகளே திருட்டுப் போயுள்ளன.

## செய்தியாளர்கள் தேவை

'எதிரொலி' மாலைத் தினசரிக்கு யாழ். மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலிருந்தும் பிரதேச செய்தியாளர்கள் தேவை.

குறிப்பு: செய்திகள் மற்றும் புகைப்படங்களை உடனுக்குடன் மின்னஞ்சலில் அனுப்பக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உங்கள் புகைப்படம் மற்றும் சுய விபரங்களை ethirolimedia@gmail என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## இன்றைய கருத்தோவியம்

மஹிந்தவின் மெய்ப்பாதுகாவலர்கள் 42 பேர் கொழும்பிற்கு - செய்தி




நன்றி - அத தெரண

## வாசகர் கவனத்துக்கு...

உங்கள் பிரதேச ஆலய, பாடசாலை, சன சமூக நிலைய, விளையாட்டு, நிகழ்வுகளை படங்களுடன் எமக்கு அனுப்பி வைத்தால் அன்றைய தினமே "எதிரொலி"யில் பிரசுரிப்போம். தகவல்களை ethirolimedia@gmail என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவோ தொலைபேசியூடாகவே அனுப்பிவைக்கலாம்.

அச்சுவேலி இடைக்காடு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் இன்றைய நான்காம் திருவிழாவில் அம்மன் வீதியுலா வந்தபோது...



இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தன் என்பவரால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 04.05.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.